

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவையடுத்து, கோயம்பேட்டில் வைக்கப்பட்டிருந்த அவருடைய உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி.பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட குடும்பத்தினர் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகளுக்கு ஆறுதல் தெரிவித்தார்.





தூத்துக்குடி தொகுதி நட்டாத்தியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத்தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து குறைகளை கேட்டறிந்து நிவாரண உதவிகளை வழங்கினார். அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உள்பட அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், பொதுப்பணித்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 27.12.2023 அன்று சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அரளிக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டும் பணியினை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செந்தில்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.



'உடன்பிறப்புகளாய் இணைவோம்! தமிழர்களாய் தலைநிமிர்வோம்' புதிய உறுப்பினர்கள் சேர்க்கையைத் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் பலனாக திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இளைஞர்களும், பொதுமக்களும் கழகத்தில் தங்களை உடன்பிறப்புகளாய் இணைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கான உறுப்பினர் அட்டைகளை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை மேலாளர் ஜெயக்குமார் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.


